செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஉ] யாழ்ப்பாணம்: சாதாரண ஞு புரட்டாதி மீ உஉ வெள்ளிக்கிழமை (9-10-1970) [இல-உஎ

# செந்நாவினின் றுகாக்குங் கருணைக்கடலே

சரசுவதி மக்கள் நாவில் வீற்றிருப்பவள். மக்கள் உளத் தூய்மையுடன் அவளை வந்தித்தால் அவள் அவர்கள் நாவில் நின்று நல்ல வாக்கியங்களை பேச வைப்பாள். சகல ஞானங்களையும் கற்று விளங்கத் துணைபுரிவாள். மக்கள் அகந்தைக் கிழங்கைக் கல்வி உளத்தில் ஞான விளக்காய் அமர்ந்திருப்பாள். காசியம்பதியில் குமரகுருபரசுவாமிகள் சகலாவல்லி மாலையைப் பாடியவுடன் முஸ்லீம் மகா ராசாவுடன் முன்னொரு போதும் பேசியறியாத இந்துஸ்தான் மொழியில் உரையாடத் துணைபுரிந்து காசியம்பதியில் ஒரு திருமடமும் அமைக்க அரசனிடம் போதிய நிலமும் பரிசாக பெறத உவளுள் கல்விக்கரசியாகிய வாக்கிறைவிக்கு அரிதான தொன்றுமில்லை.



தூக்கும் பனுவற்
றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொறசுவை
தோய்
வாக்கும் பெருகப்
பணித்தருள்
வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச்
செல்வமுந்
தொண்டர்செந்
நாவினின்றுங்
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே

# 3-வது உலகத்தமிழ்மாநாடு

— தொகுத்தளித்தவர்: திரு. ரூ க. சுப்பிரமணியன் —

தன் உகரத்தே இருந்து பலமொழிகள் தோன்றினாலும் தனது கன்னித் தன்மை அழியாது என்றும் கன்னித் தன்மை பெற்று விளங்கும் அன்னைத் தமிழின் சிறப்பு தமிழர் மட்டும் போற்றுவது அன்றி வெளி நாட்டாரும் பாராட்டுவது, தமிழ்மொழியை வளப்படுத்திய ஆன்றோர்கள் திறமான புலமை உடையோர் என்பதை வெளிப்படுத்துகின்றது. அங்ஙனம் வெளி நாட்டோர் தமிழ்மொழியை வணக்கம் செய்வது வெளி நாட்டில் அமையும்போது தமிழின் சிறப்பு மேலும் ஒரு படி உயருகின்றது. பிரான்சின் எழில்மிகு தலை நகரான பாரிஸ்மா நகரிலே மூன்றும் உலகத் தமிழ்மாநாடு யூலை திங்கள் 15 - 18 தேதிகளில் நடைபெற்றது தமிழர் அனைவரும் அறிந்த ஒன்றே உலகின் பல பகுதிகளில் இருந்தும் அறிஞர்கள் இந்த மாநாட்டில் பங்கு கொண்டனர். காலேஜ் டி பிரான்ஸ் என்னும் கல்லூரியில் நிகழ்ச்சிகள் நடந்தன. தமிழ்மொழியில் புலமை பெற்ற அறிஞர்கள் பலரையும் ஒன்று சேரக் காணும்பேறு இம் மாநாட்டில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கு கிடைத்தது தமிழ் மாநில முதல்வர் கருணாநிதி, நிதி அமைச்சர் மதியழகன், சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம், பன்மொழிப் புலவர் அப்பாத்துரை, கருத்துக் கருவூலம் கி வா. ஜகநாதன், பேராசிரியர் மு. வ., பாணடிச்சேரி முதல்வர் பருக் மரைக்காயர், சென்னைப் பலகலைக் கழக துணைவேந்தர் சுந்தரவடிவேலு மதுரைப் பல்கலைக்கழக துணைவேந்தர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தவத்திரு. தனிநாயக அடிகள் யுனெஸ்கோ நெறியாளர் ஆதிசேஷயா மற்றும் தமிழில் புலமைபெற்ற மேற்கு நாட்டு நூற்றுக்கணக்கான தமிழ் அறிஞர்கள் உலகின் பலபகுதிகளில் இருந்தும் வந்து கலந்து கொண்டனர். மாநாட்டு நிகழ்ச்சிகள் எட்டுப் பிரிவுகளாக வகுக்கப்பட்டிருந்தன 1 ஆரம்பம், 2. கல்வெட்டுக்களும் தொல் பொருள்களும், 3. சங்க இலக்கியங்கள், 4. தமிழும் வடமொழியும், 5. தமிழரின் வெளிநாட்டுத் தொடர்புகள், 6. தமிழ்ச் சமுதாயம், 7. தமிழில் நவீன இலக்கியங்கள், 8. முடிவுரை.

### துவக்க விழா

மாண்புமிகு

கலைஞர் மு. கருணாநிதி மாநாட்டுத் ஆரம்ப உரையில் பேராசிரியர் பிலியோசா, மாண்புமிகு கருணாநிதி, டாக்டர் ஆதிசேஷையா, திரு சுப்பையா ஆகியோர் இடம்பெற்றனர். எழுத்திலும் பேச்சிலும் வல்லமை பெற்ற கலைஞர் கருணாநிதி மூன்றும் மாநாட்டிற்கு ஏற்ற இடமாக பாரிஸ் மாநகரம் அமைந்தது என்பதை வெகு அழகாக எடுத்துரைக்கிறார். பாரி வள்ளலையும் பாரிஸ்மா நகரையும் ஒப்பிட்டுப் பார்த்த விதம் பாராட்டுக்குரியது. தமிழ்க் கலாசாரமும், பிரஞ்சு கலாசாரமும் தான்மையும நட்பும் மக்கவை' வின்ஸ்லோ குறிப்பிட்டதுபோல இலக்கிய வளத்தில் தமிழ், கிரேகக மொழியினைக் காட்டிலும உயர்ந்தது. தமிழ் கிரேக்க மொழிகளை இணைத்து நோக்கினல அது லததீனை விட இனிக்கும். தமிழ் மொழி 4000 ஆண்டுகள் வரலாறு கொண்ட சிறப்புடையது தான். வருஙகாலம விஞ்ஞானத்தை எதிர் நோக்கி உள்ளது. இன்று மனிதன் சந்திரனில் கால் வைத்தாகிவிட்டது. ஆகவே தமிழை ஒரு நவீன மொழி ஆக்கும தருணம வந்துவிட்டது. பல அரசியல் கொள்கைகளுடனும், பல மத கோட்பாடுகளுடனும், பலப்பல உட்பிரிவுகளுடனும் நம்மில்பலர் இருப்பினும் நாம் அனைவரும் தமிழ்மொழி என்ற ஒரே கட்சியில் இணைக்கப்பட்டுள்ளோம். தமிழ்மொழி மற்றும் கலாசார முன்னேற்றத்திற்குப் பாடுபடுவோமாக என்று உரைத்து மாநாட்டைத் தொடக்கினார்.

### தமிழ்க் கலையும் தத்துவமும்

தமிழர் நாகரீகம் உலகெங்கிலும பரவி வருவதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. ஒன்று தமிழர் சங்கம் அமைத்து தமிழ் வளர்ததது மற்றொன்று 2000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்களுக்கு அரும்பெரும் செல்வமாக தொல்காப்பியம் இருந்து வந்தது. இந்தியாவின் பழம்பெரும நாகரீகம் திராவிட நாகரீகம் என்பது ஆட்சியாளர்கள் நிரூபித்த உண்மை. சிந்துப் பள்ளத்தாக்குப் புதைபொருள் சின்னங்கள் இந்தக் கூற்றினை நிரூபிக்கின்றன. கம்போடியாவில் உள்ள கட்டிடக் கலையில் தமிழகத்து மலை வழவக் கோயில்களைக்காணு இன்றோம். ஒரு காலத்தில் சிந்து முதல் கம்போடியா வரை தமிழ்க் கலாசாரம் நிலவி இருந்தது. ஸ்ரீரங்கம் இராமேஸ்வரம் போன்ற தென்னிந்திய கலைச்சின்னங்களைப் பாதுகாக்கும் திட்டத்தில் யுனெஸ்கோ ஸ்தாபனம ஒத்துழைக்கிறது. தமிழரின் கோயில் கட்டும் கலை, நகர அமைப்பு முதலியவற்றை பழைய சிற்பங்களில் இருந்து இன்றும் கண்டுகொள்ளலாம். நடராஜர் சிலை மனித குலத்தின் மாபெரும் கலைச்சின்னங்களில் ஒன்றாக அமைந்துவிட்டது. தமிழ் ஆராய்ச்சி ஓர் சர்வதேச ஆராய்ச்சி என்றே கூறவேண்டும.

### கல்வெட்டுகளும் தொல் பொருள் ஆராய்ச்சிகளும்

பேராசிரியர் பிலியோசாவின் தலைமையில் கூடிய

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

ம்நயர் நெஞ்சம்

# கந்தஷஷ்டி விரதத்தை எத்தினம் அநுட்டிப்பது?

"இந்துசாதனம்" ஆசிரியருக்கு, ஐயா,

மேற்படி விரதம் கொக்குவில் வாக்கிய பஞ்சாங்கத்தின்படி (31-10-1970) ஐப்பசி மாதம் 14-ஆம் திகதி சனிக்கிழமையெனவும மட்டுவில் திருக்கணித பஞ்சாங்கத்தின்படி ஐப்பசி 13-ஆம் திகதி (30-10 70) வெள்ளிக்கிழமையெனவும் குறிக்கப்பெற்றிருக்கின்றன. அது மட்டுமல்ல மாசப் பிறப்பிலும் வித்தியாசம காணப்படுகின்றன (முந்தியது ஞாயிறு அடுத்தது சனி) எந்தப் பஞ்சாங்கத்தைக் கைக்கொள்வது என அறிய மக்கள் ஆவலுடனிருக்கிறார்கள். முருகப் பெருமானுடைய கந்தசஷ்டி விரதத்தை எப்பொழுது ஆரம்பிக்கவேண்டுமென்பதை அறிஞர்கள் இப்பத்திரிகை வாயிலாகத் தெரிவிப்பார்களாயின் சைவ மக்களுக்குப் பெரும உதவியாக இருக்கும்.

மலாயன்பென்சனர், இங்ஙனம்,
புலவர்இல்லம்' உடுப்பிட்டி. மு. காங்கேசு,

# ஆசிரியர் தலைவர் ஓய்வுபெற்றார்

காரைநகர், இலகடி சைவத் தமிழ்ப் பாடசாலைத தலைமையாசிரியராய் நீண்ட காலம் பணிபுரிந்த திரு க நல்லதமபி அவர்கள் 1-10-70 இல தமது சேவையிலிருந்தும இளைப்பாறியுள்ளார்.

வலிகாமம் மேற்குத் தமிழாசிரியர் சங்கத்தின் தலைவராய்ப் பல வருடங்களாகப் பணி புரிந்து வரும திரு க. நல்லதமபி அவர்கள் காரைநகர் இலகடி சைவத் தமிழ்ப் பாடசாலையில் (37) முப்பத்தேழு வருடங்கள தலைமையாசிரியராக தொடர்ந்து

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

### முத்தமிழ் விழா

தொழிற்றிணைக்களத் தமிழ் மன்றம் 14-10-70 அன்று பம்பலப்பிட்டி சாஸ்வதி மண்டபத்தில் தமிழ் விழாவொன்றினை நடத்த ஏற்பாடு செய்கின்றது. சிறு கதை, கவிதை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெறுபவருக்குப் பரிசில் வழங்கப்படும்.

### தெரிவுசெயயப்பட்டனர்

இவ்வருடம் பலாலி பயிற்சிக் கழகத்தில் பயிற்சி பெறுவதற்கு 124 பேர் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர்

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

THE SAIVAPRAKASA PRESS

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சாதாரண ஞு புரட்டாதி மீ உ௩-உ வெள்ளிக்கிழமை [1970]

## பயனுள்ள கல்வி தேவை

நமது நாட்டில் ஊட்டப்படுகின்ற கல்வி சிறுவர்களுக்குப் பயனளிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். அரசாங்கம் வரிகள் மூலம் நாட்டிலுள்ள மக்களிடம் வசூலிக்கும் பணத்தில் ஒரு பாகத்தைச் சிறுவர்களுடைய கல்விக்குச் செலவு செய்கின்றது. பெற்றோரும் உடை, உணவு, கல்வி கற்றற்குத் தேவையான புத்தகங்களுக்கும் வேறும் உபகரணங்களுக்கும் தங்கள் சொந்தப் பணத்தைச் செலவு செய்கின்றார்கள். இவ்விதமாகச் செலவு செய்யப்படும் பொருளினால் மாணவர்கள் அடையும் பயன் மிகவும் அற்பமாகும். இக்காலம் மாணவர்கள் யாவரும் அரசாங்க உத்தியோகத்தைக் குறித்தே கல்வி கற்கின்றார்கள், அங்ஙனம் கல்வி கற்கின்ற இலட்சக்கணக்கான மாணவர்களும் ஒரு சிறு தொகையினரே அரசாங்கத்தில் உத்தியோகம் பெறக் கூடியதாகவிருக்கின்றது. அதனை அறிந்துகொண்டும் உத்தியோகம் பெறும் மோகத்தாலேயே மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள்.

மாணவர்களுக்கு தொழிற் கல்வியே ஊட்டப்படுதல் அவசியம். முயற்சியே செல்வம் முயற்சியின்மை வறுமையாகும். நாட்டின் வளம் பெருகுவதற்குத் துணையாக மாணவர்களுக்குத் தொழிற் கல்வியே ஊட்டப்படுதல் வேண்டும்.

தச்சுத் தொழில் புரிகின்ற குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் கல்வி பயின்றபின் அரசாங்க உத்தியோகத்தைப்பெற விரும்பி அலைகின்றார்களே யொழிய தங்கள் பெற்றோர்கள் செய்த தச்சுத் தொழிலை இழிவாகவெண்ணி வேலையற்றுச் சோம்பேறிபாகத் திரிகின்றார்கள். கமக்காரருடைய பிள்ளைகளும் கமத்தொழிலை இழிவாகமதித்து அரசாங்க உத்தியோகத்தைநாடி அலைகின்றார்கள். சிற்பத் தொழில், பொன் வேலை, செப்பு பித்தளை வேலை, இசைக்கலை முதலியவற்றில் திறமையானவர்கள் தொகை குறைந்து வருகின்றது. இவ்விதமே நாட்டில் பலவித தொழில்களைப் புரிகின்ற குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் தங்கள் குடும்பத் தொழில்களை இழிவாக வெண்ணி உத்தியோகமே புருட இலட்சணமெனவெண்ணி சோம்பேறிகளாகத் திரிகின்றார்கள்.

முயற்சி பார்க்கின்றவன் தான் உலகில் பெரியவன். முயற்சியில் இழிவு உயர்வில்லை முயற்சியின்மை இழிவைத்தரும். ஒருவன் தன் உணவுக்குத் தானே உழைக்க வேண்டும். பிறருடைய உழைப்பில் சீவிப்பது பாவமாகும் 'போனக மென்பது தானுழந் துண்ணல்' என்றார் ஒளவைப் பிராட்டியாரும்.

அரசாங்கம் கல்விமுறையை மாற்றி மக்களுக்குப் பயன்தரக்கூடிய கல்வி முறையையூட்ட முன் வருதல் வேண்டும். நாட்டையாளும் பொறுப்பையேற்கும் ஒவ்வொரு அரசாங்கமும் பயனுள்ள கல்வியை வகுப்போம் என்ற வாக்குறுதி செய்வதேயன்றி தங்கள் கூற்றை நிறைவேற்ற முன்வருவதைக் காணோம். நாட்டில் இன வேற்றுமைக்கும் காரணமாகவிருப்பதும் இக் கல்வி முறையே. சிங்கள மக்கள் தங்களுக்குக் கூடுதலான உத்தியோகங்கள் இடைக்க வேண்டுமென விரும்புவார்கள் தமிழ் மக்களும் தங்கள் தகுதிக்கேற்ற உத்தியோகத்தைப் பெறவிரும்புவதும் சகசமே. இதனாலே நாட்டில் வாழுகின்ற மக்களுக்கிடையில் ஒற்றுமைக் குறைவை நீக்குதற்குக் கல்வி முறையை மாற்றியமைக்க அரசாங்கம் உடனடியாக வழி தேடுதல் வேண்டும்.

## பரமேஸ்வரக்கல்லூரி பொன் விழா

அக்கல்லூரியினது பொன்விழாவைச் சிறப்பாக நடத்த ஒரு பொன் விழாக் குழு அமைக்கப் பெற்றிருக்கின்றது. அவ் விழாவினது ஆரம்பவைபவம் 7-10-70 புதன்கிழமை பி. ப. 4-00 மணிக்கு கல்லூரிமண்டபத்தில் ஆரம்பமானது. இலங்கை பொது வித்தியாதிகாரி டக்டர் பி உடுகம ஆரம்ப உரை நிகழ்த்தினர். உதவிப் பொது வித்தியாதிகாரி

## சகலகலாவல்லிமாலை

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர்கோயில் சைவசமய அபிவிருத்திக் கழக வெளியீடு விலை: சதம் 10. இந் நூல் விற்பனையால் கிடைக்கும் நிதி கழகப்பணிக்குப் பயன்படுத்தப்பெறும்.

திரு. எம். எம். ஏ. மர்ன குரியா, வடமாகாண அரசாங்க அதிபர் திரு. எம். டபிள்யூ எம் அமரசேகரா ஆகிய இருவரும் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்கள்.

## அணிந்துரை அரங்கம்

## புலியூரந்தாதி

மூலமும் உரையும்

நூலாசிரியர்:
மாதகல் மயில்வாகனப் புலவர் அவர்கள்

உரையாசிரியர்:
ம. க. வேற்பிள்ளை அவர்கள்
விலை ரூபா 2-00.

பதிப்பித்தவர்:
உரையாசிரியர் குமாரர்
வழக்கறிஞர்
வே. மாணிக்கவாசகர் J. P.

பெறுமிடம்:
சைவப்பிரகாச அச்சியந்திரசாலை
450 காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.

புலியூர் (சிதம்பரம்) வியாக்கிரபாத பூசித்தமையினாலே இத் தலத்திற்கு இப் பெயருண்டாயிற்று. அடிதோறும் இறுதிக்கணின்ற எழுத்தேனும், அசையேனும், சீரேனும், சொல்லேனும் அடியேனும் மற்றை அடிக்காதியாக வர இயற்றப்படுவது அந்தாதி. ஒரு அடியில் வந்த சொல் மற்றை அடிகளில் வர இயற்றப்படுவது யமகம. இந் நூல் யமக வந்தாதியாக அமைந்துள்ளது.

தரிசிக்க முத்திதரும் சிதம்பர நடராசப் பெருமானுக்கு அன்புசெய்கின்றவர்கள் இம்மை மறுமை வீடாகிய மூன்று பேறுகளையும் பெறலாம். அந் நோக்கத்துடனேயே நூல் இயற்றப்பெற்றது. இந் நூலுரைக்குச் சிறப்புப் பாயிரம் உரையாசிரியர்காலத்திலிருந்த பெரும் புலவர்களால் வழங்கப்பெற்றிருக்கின்றது.

நல்லூர் ஸ்ரீமத் வே. கார்த்திகேயோபாத்தியாயர், நல்லூர் வித்துவ சிரோமணி ஸ்ரீமத் ந. ச. பொன்னம்பலபிள்ளை உடுப்பிட்டி ஸ்ரீமத் அ. சிவசம்புப்புலவர் புலோலி நகர் ஸ்ரீமத் ம முத்துக்குமார சுவாமிக்குருக்கள் புலோலி நகர் ஸ்ரீமத் வ. குமாரசுவாமிப்புலவர் புலோலி நகர் ஸ்ரீமத் அ. வேன்மயில்வாகன உபாத்தியாயர், சுன்னாகம் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப்புலவர், ஊரெழு ஸ்ரீமத் சு சரவணமுத்துப் பிள்ளை, வலவை இயற்றமிழ்ப்போதாகாசிரியர் ஸ்ரீமத் ச வைத்தியலிங்கபிள்ளை, காரைநகர் ஸ்ரீமத் கார்த்திகேய ஐயர் குமாரர் காசிநாதஐயர் ஆகியோராவர்,

இந் நூலுக்கு உரை காண்பது மிகவும் கடினமான செயல். செய்யுளைக் கண்ணுமித்து வேற்றுமை அல்வழிச் சந்திகளைப்பிரித்துப் பொருத்தமான பொருள் காண்பது பன்னூற் புலமையும் இலக்கண விமரிசபுமுடைய புலவருக்கன்றிப் பிறருக்கு அமையாது.

உரையின் தேவையைப் பற்றி புலோலி நகர் ஸ்ரீமத் வ. குமாரசுவாமிப் புலவர் கூறுவதை இங்கு தருகின்றோம்.

அன்றுரைத்த புலியூரந்
தாதிக் கர்த்த
மறிந்திடுவார் சிலரன்றி
யறியார் பல்லோர்
சென்றுரைத்த போதஞானா

## இராணுவக் கொடி அகற்றப்பட்டது.

கோணேசர் கோயிலிருக்கும் மலையுச்சியில் இராணுவத்தினரின் கொடி பறக்கவிடப்பட்டதையும். "இது இராணுவத்தினருக்குச் சொந்தமான இடம்" என எழுதப்பட்ட பலகையைத் தொங்கவிட்டமையையும் தமிழ் மக்கள் ஆட்சேபித்துள்ளார்களெனவும் அதன் விளைவாக அவை அகற்றப்பட்டதாகவும் அறிகின்றோம்.

—

கொள்ளு முள்ளச்
சிறுவருந்தே சிகரின்றித்
தெளியுமாற்ற
னன்றுரைத்த பொருளெழுது
கெனத்தனக்கு
நற்றமிழ்போ தித்தநல்லூர்
நாய்கரேறங்
குன்றுரைத்த தமிழ்க்கலைஞன்
கார்த்திகேயக் குரவனினி
துரைத்தபணி சிரமேற்
கொண்டே

புலியூரந்தாதிக்குப் பொருள் ஒரு சிலர்தான் அறிவார். பலபேர் அறியார் சிறுவரும்தெரியும் முறையில் உரையெழுதப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீமத் ம. க வேற்பிள்ளையவர்கள் நாவலருக்குப் பின் தமிழுலகத்தாரால் போற்றப்படுகின்ற சிறந்த உரையாசிரியர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரிடத்திலும் வித்துவசிரோமணி ந ச பொன்னம்பலபிள்ளையவர்களிடத்திலும் கல்வி கற்றவர். அவர் இயற்றிய நூல்கள் வைரவதோத்திர மாலை புலியூரந்தாதியுரை, கெவுளிநூல் விளக்கவுரை, திருவாதவூரடிகள் புராண விருத்தியுரை, வேதாரணியக் குறிப்புரை, அபிராமியந்தாதியுரை, ஆருயிர்க் கண்மணி மாலை, ஈழமண்டல சதகம்.

புலியூரந்தாதியில் ஒரு
செய்யுளும், அதன் உரையும்

புத்திக்கரும்பசுந்தேனமுதாம்
புலியூரரெனிற்
புத்திக்குடைய கலைமங்கை
சேரும் புரையில்பொருப்
புத்திக்குலவிப்புகழ்மிக
நீடும் புவனியிலே
புத்திக்குரியபொருடந்து
மேவிடும் பூந்திருவே.

(இ-ள்) புத்து இக்கு உறும் பசும் தேன் அமுது ஆம் புலியூரர் எனில் — (தம்மெய்யன்பருக்குப்) புதிய கருப்பஞ்சாற்றையும் இறுகிய பசிய தேனையும் அமுதையும்போலத் தித்திக்கும் புலியூரர் என்று (சிரத்தையன்போடு ஒருகாற்) றுதிக்கின்,— புத்திக்கு உடைய கலைமகள் சேரும் — (அவரிடத்து அறிவிற்குரிய கலைமகள் சென்று சேருவள்,— புரை இல் புகழ் திகழும் பொருப்பு உலவி மிகநீடும்— (ஆதாரமாகிய உலகம் பொன்றுந்துணையும் ஆதேயமாகிநிற்றலின்) நனகுயர்வு இல்லாத புகழானது திகழும் மலையைப் போல விளங்கி மிகுந்தோங்கும்,— புவனியில் பூ திருபுத்திக்கு உரியபொருள் தந்து மேவிடும் — இப்பூமியின்கண் அழகிய இலக்குமி அநுபவத்திற்குரிய செல்வப் பொருள்களைக் கொடுத்து (அவரினின் சணீங்காது) வதிவள். எ-று. உலாவி உலவி என நின்றது. ஏகாரம் முன்னையது இசைநிறை. பின்னையது ஈற்றசை (புலியூரர்) எனச் சிரத்தையன் போடு ஒருகாற்றுதிகிற் கல்விப் பொருளுஞ் செல்வப் பொருளும் பெரும்பான்மையும் இவற்றான்வரும் புகழும் அவரை விட்டுநீங்கா என்பது கருத்து.

ஈழநாட்டில் வாழ்ந்த பழைய புலவர்களுடைய நூல்களை இக்காலத்தவர்கள் கற்றல் வேண்டும். அல்லாமலும் இந்நூல் சிதம்பரம் நட—

## ஆசிரியத் தலைவர் ...

[1-ஆம் பக்கத்து வளர்ச்சி]

பணியாற்றிய காலம் அவரது வாழ்வில் பொன்னெழுத்துக்களாற் பொறிக்கக் கூடிய காலமாகும். 1-9-1931இல் காரைநகர் களபூமி சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணி புரியத் தொடங்கிய திரு க. நல்லதம்பி ஆசிரியர் நாற்பது ஆண்டுகள் நல்லாசிரியப்பணி புரிந்தார். வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்திலும், அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்திலும் முக்கிய பதவிகளை வகித்ததுடன் சங்க அங்கத்தவர்களுக்கு நல்ல வழிகாட்டியாயும் சிறந்த தொழிற்சங்க வாதியாயும் திகழ்ந்தார்கள்.

வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கத்தின் தலைமைப் பதவியைத் தாங்கிவரும் திரு. க நல்லதம்பி அவர்கள் காரைநகர் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கம், காரைநகர் மணிவாசகர்சபை முதலிய ஸ்தாபனங்களின் தலைவராகவும் இருந்து அருந்தொண்டாற்றிய பெருந்தகையாளர் என்று அறிஞர்களினாற் பாராட்டப்பட்டார்.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் 1943ம் ஆண்டு தொடக்கம் அதிகார சபை அங்கத்தவராயிருந்து இற்றைவரை பணியாற்றிவரும் தலைமையாசிரியர் திரு. நல்லதம்பி அவர்கள் வைத்தியசாலைச் சங்கத்தில் காரியதரிசியாகவும், தனாதிகாரியாகவும், உப தலைவராகவும் இருந்து பெரும்பணியாற்றி வந்தார் என்பது விசேடமாகக் குறிப்பிடத்தக்கவை. காரைநகர் இலகடி சைவத் தமிழ்ப் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு க நல்லதம்பி அவர்கள் ஆசிரிய உலகுக்கு நல்லதொரு கலங்கரை விளக்கமாக இருந்தார் என்றால் மிகையாகாது.

—

## நவராத்திரி விழா

மஸ்கெலியா
சரஸ்வதி கலா மன்றம்

மஸ்கெலியா, சரஸ்வதி மன்றம் கலைமகள் விழாவை வழமைபோலச் சிறப்பாக நடாத்த ஒழுங்குகளைச்செய்துள்ளது. மஸ்கெலியா பிரதான வீதியில் அமைந்திருக்கும் மேற்படி மன்றத்தின் மண்டபத்தில், 7, 8, 9 10-10-70 ஆகிய தினங்களில் சிறப்பாகநடைபெறவுள்ளன. சரஸ்வதி பூசைத்தினத்தன்று ஊர்வலமும், விஜயதசமியன்று குழந்தைகளுக்கு ஏடு தொடக்குதலும் நிகழுமென அம் மன்றத் தலைவர் டாக்டர் திரு. K. S. நாதன் தெரிவிக்கின்றார்.

X X X

யாழ்ப்பாணம் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் இவ்வருடம் 1-10-70 தொடக்கம் 10-7-70 வரையும் சக்தியைப்பற்றி விசேட பூசையும் விஜயதசமி பூசையும் சிறப்பாகநடைபெறும். விஜயதசமியன்று வித்தியாரம்பமும் செய்யப்பெறும்.

—:—

ராசர்பேரில் இயற்றப்பெற்ற தோத்திரம். கரும்பு தின்னக் கைக்கூலி தேவையில்லை. யாவரும் இந்நூலைப் பெற்றுப் படித்தல் நன்று. சைவமும் தமிழும் தழைத்தினி தோங்கும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கனகராசா பெண் அரியரட்ணம்மா, கொல்லங்கலட்டி
தெல்லிப்பழை. —பிரதிவாதி
இல: Misc 1560 எதிராக
சுப்பிரமணியம் கனகராசா, சுங்கக் கந்தோர் அருகாமை, காட்டுக் கந்தோர், யாழ்ப்பாணம். —எதிர்வாதி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் Misc 1560ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விவரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஞூ ஐப்பசி மீ 31-ம் திகதி [31-10-70] சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழை கோவிற்பற்று மாவிட்டபுரம் இறை 'பெரியடைப்பு பொற்றேருளை சடயபத்தவை” நி. பர. 25½ இணை நல வீடுகளும் செய்பயிர் வாழ்வயிர்களும் எல்லை கிழக்கு காசி கனகருக்கும் அவரின் பிள்ளைகள் விநாயகமூர்த்தி பெண் தெய்வநாயகிக்கும் அவரின் பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கு கிருஷ்ணசாமி பெண் கனகாம்பிகையம்மாளுக்கும். சிதம்பரப்பிள்ளை பொன்னையாவுக்கும் பங்காளருக்கும் சிதம்பரப்பிள்ளை பொன்னையாவுக்கும் சின்னக்குட்டி கைம்பெண் வள்ளிப்பிள்ளைக்கும் உரிய ஆதனங்கள், மேற்கு வயிரவப்பிள்ளை கந்தையாவுக்கும் அவரின் சகோதரனுக்குமுரிய ஆதனமும், ஒழுங்கையும், தெற்கு ஒழுங்கையும், மயில்வாகனம் முனியப்பிள்ளைக்குரிய ஆதனமும், இதில் சொரியலாய் நி பர. பத்தில் (10) சொரியலாய் நி பர. 5 ஆறுல் அதிலிருக்கும் வீட்டில் அரைவாசிப் பங்கு புற நீங்கலாக.

நீ. அன்னரிப்பிள்ளை
22. கோவில் வீதி, கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம். எம் 298 9—10—70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

1. டக்டர் லூக்குஸசப்பிள்ளையும் 2. பெண் ஞானம் லூக்கும் இருவரும் கரையூர், யாழ்ப்பாணம். வழக்காளிகள்

இல: M B 7036 எதிராக

1. நீக்கிலாப்பிள்ளை ஜோசேப்பிள்ளை
2. மாணுவேந்து நீக்கிலாப்பிள்ளை இருவரும், கரையூர். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 7036 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விவரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970-ம் ஆண்டு ஐப்பசிமீ 25-ம் திகதி (25-10-70) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபாய் 3684/- இன்னும் 10 11-64 தொடக்கம் 16-9-67 வரைக்கும் ரூபாய் 2500/-க்கு 12% வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 341-51

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளி கோவிற்பற்று கரையூரிறை “குளத்தையன் தடியிருப்பும அந்தித்தன் தறையும்” பர. நி. இல 1½ வீடு, கிணறு குசினி செய்பயிர் வாழ்வயிர்கள் இன்னுமதைச் சேர்ந்தவைகளும் இதற்கெல்லை கிழக்கு ஞானப்பிரகாசம் பெண் எலிஸபெத்தினுதனம் வடக்கு செபஸ்தியாம்பிள்ளை பெண் ராஜேஸ்வரியினுதனம், மேற்கு றெயில் ரோட்டு தெற்கு மேரி ஜேஸ்பைனுதனம், இடங்களுமதைச் சேர்ந்தவைகளும். பதிவிலக்கம் D 258/297 தொடர்ச்சி D 297/239

133 பருத்தித்துறை ரோட்டு, கல்லூர், யாழ்ப்பாணம், 1—10—70
செ. விசாகரெத்தினம், கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
எம். 295 9—10—70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு இல: M. B. 8792

நுணுவில், சாவகச்சேரி, செல்லப்பா கவரத்தினம் —வழக்காளி

எதிராக

1. கொட்டடி, யாழ்ப்பாணம் A. கனகசபை திருநாவுக்கரசு கைம்பெண் பாறுபதிப்பிள்ளை
2. ஷை யூர் திருநாவுக்கரசு தனநாயகம் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B 8792-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விவரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970-ம் ஞூ கார்த்திகை மீ 11-ந் திகதி (11-11-70) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 6380-00ம், 27-1-67 தொடக்கம் 11-6-69 வரைக்கும் ரூபா 5000/-க்கு பத்து வீதமான வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 531-55 இதில் ரூபா 175-00 கொடுபட்டது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கிறை 'பள்ளுவிலி தோட்டம்” பர கி. இலா. இரண்டு குழி முக்கால் (பர கி. இலா. 2 குழி ¾) உத்தரவுபெற்ற உலாந்தா A லாசறஸ் அவர்களால் 13-2-63ல் 2992ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட அளவு படத்தில் 2-ம் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும் வீடும், கிணறும் பயிர்வகைகளும் எல்லை கிழக்கும் வடக்கும் இராமலிங்கம் பேரம்பலம் பெண் பராசக்தி அல்லது யோகம்மாவிற்குரிய ஆதனம் மேற்கு திருநாவுக்கரசு செல்வராசாவிற்குரிய ஆதனம், தெற்கு ஆஸ்பத்திரி ரோட்டு. இதடங்கலும்.

இதன் பதிவு D 306/91

காரைநகர் வை. ஏரம்பமூர்த்தி
1970-ம் ஞூ புரட்டாசிமீ 14-ம் திகதி. ஏல விற்பனையாளரும்.
எம்.301 9—11—70 கொமிசனரும், விலைமதிப்பாளரும்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: M B 11066

கோவில் தெரு, நல்லூர் யாழ்ப்பாணம் நாகலிங்கம் கோபாலசிங்கம் —வழக்காளி

எதிராக

புன்னாலைக்கட்டுவன் தெற்கு புன்னாலைக்கட்டுவன் 1. முருகர் சின்னத்தம்பியும் பெண்
2. பார்வதி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 11066-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விவரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970-ஆம் ஞூ '7-11-70' (கார்த்திகை) மீ 7-ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 1365/-ம் 24-8-69 தொடக்கம் 9-1-70 வரைக்கும் ரூபா 1000/-க்கு 2 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 286-35.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோவிற்பற்று ஏழாலை இறை 'பெரிய தோட்டம் இரணவுடையும் ஒதியடியும்' பரப்பில். இல 2 குளி 7 1/16 இதற்கு எல்லை கிழக்கு சின்னட்டியர் அப்பாத்துரைக்குரிய ஆதனம். வடக்கு சமரப்பிள்ளை துரையப்பாவுக்குரிய ஆதனமும ஒழுங்கையும மேற்கு ஒழுங்கை. தெற்கு கயிலாயர் முதலித்தம்பிக்குரிய ஆதனம் பதிவு இல. H 421/7

நா ஸ்ரீ இரங்கநாதன்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
20, பெருமாள்கோவில் வடக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம், 18—9—70
எம். 293 9-10-70

---

## COMMISSION SALE

### கோட்டுக் கொமிஷன் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் இலக்கம்: 10311

கரணவாய் வடக்கு கார்த்திகேசு குமாரசாமி — வழக்காளி

எதிராக

உடுப்பிட்டி கல்லுவம்
1. கணபதிப்பிள்ளை கந்தவனம்
2. பெண் சிவனதங்கம்
3. கந்தவனம் குட்டித்தம்பி —எதிராளிகள்

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விவரிக்கப்படும் ஆதனம் 1970-ஆம் ஆண்டு கார்த்திகை மீ 12-ம திகதி (12-11-70) வியாழக்கிழமை பிற்பகல் 4-00 மணி தொடக்கம் குறித்த ஆதனமிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக்கோவிற்பற்று கரணவாய்இயையாணன் குறிச்சியிறை வேலவன் தோட்டம் நிலப்பரப்பு 13, 7/8 இதில் வட மேற்குப் புறமாக நிலப்பரப்பு 4½ நீக்கி மிகுதிக்கு நிலப் பரப்பு 9, 3/8 எல்லை கிழக்கு கதிரித்தம்பி தில்லையாவுக்கும் மருபேருக்குமுடையவாதனம். வடக்கு சிதம்பரநாதர் கதிர்காமத்தம்பிக்கும் மருபேருக்குமுடைய வாதனம்: மேற்கு ஒழுங்கை தெற்கு இளையதம்பி தம்பையாவுக்குமுடையவாதனம், இவ்வெல்லைக்கு உட்பட்ட வையடங்கலிற் சொரியலாய் நில

ப்பரப்பு 5, 3/8 ம் அதைச் சேர்ந்தவைகளும் கிணற்றிலிதற்குரிய பங்கும வழிவாய்க்காலுரித்தும்.

| | |
|---|---|
| தீர்ப்புத்தொகை ரூபா | 722-90 |
| ரூபா 500க்கு 19-12-68 தொடக்கம் 10-6-69 வரை 10 வீத வட்டி | 25-00 |
| ரூபா 747-90 க்கு 10-6-69 தொடக்கம் 27-8-70வரை 5வீதவட்டி | 45-15 |
| மொத்தம் | 793 04 |
| செலவு ரூபா | 146 81 |
| மொத்தம் ரூபா | 939 85 |

V. M கந்தசாமி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
அல்வெட்டித்துறை
25-9-70 எம். 303 9-10.70

---

## Commission Sale

### கோட்டுக்கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் இல: 6570

1. புலோலி மேற்கு, முருகர் பொன்னுச்சாமி கைம்பெண் கனகம்மா —வழக்காளி

எதிராக

1. பருத்தித்துறை தற்காலம் நல்லூர், ஆறுமுகம் வைரமுத்து நடராசா
2. ஷை பெண் சிவானந்தம்
3. ஷை சின்னத்தம்பி கந்தையா } மரணம் (Dead)
4. ஷை பெண் இராசம்மா

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எமக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விவரிக்கப்படுமாதனங்கள் 1970ம் ஞூ டிசம்பர் மாதம் 3-ந்திகதி (3-12-70) வியாழக்கிழமை முற்பகல் 9-30மணி தொடக்கம் குறித்த காணியிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை குளுக்கண்டன் வளவும் மறு பிரிவுகளும், சேதுவந்தன் வளவும் மறுபிரிவுகளும் 4½ ஆறுல் 1952ம் ஆ வைகாசி மீ 27-ம் திகதி உலாந்தா மேஸதர் வே சிவரத்தினத்தால் 1154ம் இலக்கத்தில் வரைந்தாக்கப்பட்ட படத்தின்படி நில 3 குழி 16, 3/32 கல்வீடுகள் கிணறு பயிர்களும் இன்னும் இதற்குச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு ரோட்டு, வடக்கு சின்னத்தம்பி கந்தையாவுக்குரிய ஆதனமும, மேற்கும், தெற்கும் பிரதம கடையார் கைம்பெண் நாகேஸ்வரிக்கும் மருபேருக்குமுரியவாதனமும் இவ்வெல்லைக்குட்பட்டவைகள் முழுவதும (மதிப்பிட்ட விலை ரூபா50'000)

| | |
|---|---|
| தீர்வைத்தொகை ரூபா — | 35,906 00 |
| இந்த ரூபா 35 906க்கு 5வீதப்படி 6மாதத்துக்கு வட்டி | 895 00 |
| செலவு தொகை — | 500 00 |
| | 37301 00 |
| 6-11-67ல் கொடுபட்டது | 5000 00 |
| | 32301 00 |
| வட்டி ரூபா 32301/-க்கு 5வீதப்படி 6-11-67 தொடக்கம் 17-8-68 வரை 9 மாதம் | 1210 00 |
| | 33511 00 |
| 6-8-68 லும் 17-8-68 லும் கொடுபட்டது ரூபா 6000 + 9000) | 1500 00 |
| | 18511 00 |
| வட்டி ரூபா 18511/-க்கு 5 வீதப்படி 18-8-63 தொடக்கம 17-3-69 வரை 7 மாதம் | 539 00 |
| | 19,050 00 |
| வட்டி ரூபா 19050/-க்கு 5 வீதம்படி 17-3-68 தொடக்கம் 17-9-69 வரை | 1428 75 |
| | 20478 75 |
| 3-12-69ல் கொடுபட்டது | 2000 00 |
| | 18478 75 |
| வட்டி ரூபா 18,478/-க்கு 5 வீதப்படி 3-12-69 தொடக்கம் 3-12-70 வரை | 923 90 |
| மொத்தம் ரூபா | 19,402 65 |

சிவலிங்கநிலையம், க. நல்லலிங்கம்
வி. மு. ரோட், ஏல விற்பனையாளர் & விலைமதிப்பாளர்,
பருத்தித்துறை, 5—10—70. எம். 302 9—10—70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: M B 9706

1 துரையப்பா சேனாதிராசாவும்
2 பெண் சரஸ்வதி இருவரும் 116, அம்பலவாணர் ரோட், அத்தியடி, யாழ்ப்பாணம். —வழக்காளிகள்

எதிராக

1. நாகலிங்கம் இரட்ணலிங்கமும்
2. பெண் சிவபாக்கியம் இருவரும்: அளவெட்டி தற்சமயம் P. W. D. கந்தோர் புத்தளம். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9706 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விவரிக்கப்படும் துண்டுக் காணி 1970-ஆம் ஞூ நவம்பர் மீ 4-ஆம் திகதி (4-11-70) புதன் கிழமை முற்பகல் 10-00 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- ரூபா 7620/- பின் 16-1-68 தொடக்கம்30-7-68 வரை ரூபா 6000க்கு 12 வீத வட்டியும் பின் இறுபடும் வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 334-90 சதம் இதில் ரூபா 3600/- கொடுபட்டது

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கல்லூர்ப்பகுதி கொக்குவில் கிழக்கு திண்ணைவெலி 'அல்வாறுகட்டுவன்' பர. கி. லா 19 பதிவு இல D 248/222 மேற்படி ப. கி. 4½ பதிவு இல 141/163 மேற்படி பர. கி. 10½ பதிவு D 118/116 சுடுகாட்டுப் புலம் ப. கி. 69/16 பதிவு D 141/162 மேற்படி காணிதுண்டுகளும் தற்சமயம் ஒரு துண்டாகப் ப. கி. 40, 9/16 இதில் தெற்குப் பக்கமாக பிரிக்கப்பட்ட ப. கி. 32 113/144 அறுதி விற்கப்பட்டது மிகுதிக்காணியில் வடக்குப் பக்கமாக லொற் ஒன்றுக லைசென்ஸ் சேவையர் T. கந்தையா அவர்களின் பிளான் No 1077A திகதி 12-2-1965 பிளானுக்கு அமைவாக உள்ள ப. கி. 4ம் குழி 2½ இதற்கு எல்லை கிழக்கு பொது ஒழுங்கை, வடக்கு ஆடியபாதம் ரோட், மேற்கு வேதவனம் விரகத்திப்பிள்ளையின் ஆதனம், தெற்கு லொற் 2 கார்த்திகேசு நல்லதம்பி இளையதம்பியின் ஆதனம், பதிவு D 313/141

சி. சே. மாரிமுத்து
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
வலந்தாரர்.
'விநாயக வளவு”
சித்தன்கேணி. 18-9-70.
எம். 300 9-10-70.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில்

(இந்துவிட்டார்) யாழ்ப்பாணம், நல்லூர், சடையர் சுப்பிரமணியம் —வழக்காளி

யாழ்ப்பாணம் நல்லூர், சுப்பிரமணியம் நடராசா —பதில்வழக்காளி

வழ: இல M. B. 1664 எதிராக

யாழ்ப்பாணம், நாவாந்துறை வீதி,

1. காத்தி முகம்மது முகையதீன் லெப்பை முகம்மது உம்முருல்தூம்
2. என். எம். என். எம். எஸ் அப்துல்காதர் கைம்பெண் சுலைகா உம்மா

சுதுமலை, யாழ்ப்பாணம்.

3. ஆறுமுகம் நாகராசாவும் பெண்
4. சிவக்கொழுந்தும்
5. சோமசுந்தரம் செந்தில்நாதன் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M. B 1664-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1970-ம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ம் திகதி (18-11-70) புதன்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 1500/- மட்டும்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை இறை "பொம்மைவெளியும் புளியடியும்" [illegible] 2 7/8 [illegible] 49/354ம் இல பதியப்பட்டுள்ளது. இதில் கிழக்குப் பக்கமா [illegible] அரைவாசிக்கு வி பர. 1, 7/18 வி [illegible] டிகிரிக்கொட்டிலும் கிணறும் செப்பமிட்ட வான்பயிர்களும் இந்த வி. பர. 1, 7/16க்கும் எல்லை கிழக்கு முகம்மது மீராசாயிபு பெண் முகம்மது மீரா நாச்சியாவின் உரிமைக்காரர்களுடையதும், வடக்கு சக்கிய பெண் நிரேசம்மாவினுடையதும். மேற்கு இக்காணியின் மிகுதி அரைவாசிப் பாகம் தெற்கு நாவாந்துறை வீதி, இதடைக்கும் பதிவு இல: டீ. 213/207

**S. இரத்தினசபாபதி, J. P**

ஸ்ரேசன் ரோட், கொமிசனரும், விலைமதிப்பாளரும்
கோண்டாவில், 27-9-70 எம 296 9-10-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. V. இராமலிங்கமும் பெண் 2. பூரணமும்
காரைநகர் கிழக்கு, காரைநகர் —வழக்காளிகள்

வழ: இல. M B 8353 எதிராக
A. கந்தையா மகன் குமாரகுலசிங்க
60, அரசடி வீதி, யாழ்ப்பாணம். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 8353-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1970-ஆம் ஆண்டு கார்த்திகை மீ 17-ஆம்திகதி (17-11-70) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்த காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 6916/-ம், 1-8-66 தொடக்கம் 3-8-67 வரைக்கும் ரூபாய் 5000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கொமிஷன் முதலிலாச் செலவு ரூபா 12/-ம்,

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கு இறை 'பிச்சாணி வளவு' நில. பர. 1 குளி 14½ கட்டிடங்களும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு ரோட்டு, வடக்கு மாப்பாணர் அப்பாக்குட்டியினுடையதும், மேற்கு தம்பையா மகன் சேதுப்பிள்ளையினுடையதும், தெற்கு சின்னையா திவாகரர் பெண் மாமேலியினுடையதும் அப்பாக்குட்டி நடேசலிங்கதனமும் இடைக்கும்

**நீ. அன்னலிப்பிள்ளை**

22, கோவில் வீதி கொமிஷனர் & விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம். எம். 297 9-10-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

செல்லக்கொழுந்து கைம்பெண் முத்தம்மா
நல்லூர், யாழ்ப்பாணம். —வழக்காளி

வழ இல M B 7539 எதிராக

சின்னத்துரை கைம்பெண் தங்கம்மா, இறந்த சபாபதி சின்னத்துரையின் சட்டபூர்வமான பிரதிநிதி, திருநெல்வேலிக்கிழக்கு தர்மலய வால அம்மன் கோவிலடி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 7539 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970ம் ஆண்டு கார்த்திகை மாதம் 12ம் திகதி (12 11—70) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 3060-00 5-7-65 தொடக்கம் 17-11-66 வரைக்கும் ரூபா 2000-00க்கும் 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 360-00ம் அறவிடப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோவிற்பற்று திருநெல்வேலி இறை ஐயன்பெருமான் வளவு விராப் குடியிருப்பு, முதலிகுடி குடியிருப்பு புதன்குடியிருப்பு வளவும் மற துண்டுகளும் சிதம்பரன் குடியிருப்பும் நிலப்பரப்பு 2 குழி 17, 7/8ம் கல் வீடும். கிணறும் பயிர்களும், கிழக்குப் பக்கமாக இருக்கும் கிணற்றில் பங்கும். வட கிழக்குப் பக்கமாக இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால உரித்தும் எல்லை கிழக்கு சண்முகம்பிள்ளை பெண் தங்கமுத்துவிற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்; வடக்கு கைமய ழுங்கை, மேற்கு கதிர்காமர் வல்லிபுரத்திற்குமுரிய ஆதனமும், ஒழுங்கையும், தெற்கு மூத்தர்க்குமாரு குமாரசாமிக்கும் பெண் தங்கம்மாவுக்கும் உரிய ஆதனமும், கிழக்கு எல்லைக் காணியிற் தெற்கு எல்லை ஓரமாக கிழக்கை இருக்கும் கைஒழுங்கைக்குப் போகும் பாதை உரித்தும்.

**கா. தர்மலிங்கம்**

உடுப்பிட்டி, 25-9-70, கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
எம், 295 9-10-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

1. வல்லிபுரம கந்தையா, மட்டுவில் வடக்கு, —வழக்காளி

இல: M B 9650 எதிராக

1. மாரிமுத்து நாகலிங்கம்
2. பெண் இராசம்மா, மாவிட்டபுரம், யாழ்ப்பாணம் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B. 9650 இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகளை 1970-ம் ஆண்டு ஐப்பசி மீ 31-ந் திகதி (31-10-70) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபாய் 8089-17 27-12-67 தொடக்கம் 16-11-68 வரைக்கும் ரூபாய் 5650/-க்கு 10% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 337-85 சதம (கோட்டுச் செலவாக ரூபா 150/- கொடுபட்டுள்ளது)

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் வடக்கு தெல்லிப்பழைக் கோவிற்பற்று மாவிட்டபுரம இறை "அமர்களுவத்தி" பர. நி இலா 3 இதற்கெல்லை கிழக்கு கைமுழுங்கை, வடக்கு கீழ்க்காணப்படும ஆதனமும், தெற்கு இராமலிங்கம் கனகரத்தின [illegible] வைரமுத்து ஏகாம்பரம் ஆகியோரின் ஆதனம், மேற்கு கையழுங்கை இதில சொரியலாக 1¼ பரப்பும் கிணறும் கல்வீடும் கட்டட

பதிவு இல: H. 345/208

2. டி இறை 'ஆச்சாரியார் வளவு" பா. நி. இலா. 1¾ இதற்கெல்லை கிழக்கும் வடககும் கைவொழுங்கை, மேற்கு ஒழுங்கை தெற்கு மேற்சொல்லப்பட்ட ஆதனம், இவ்வெல்லைக்கு உட்பட்ட செய்பயிர் வான்பயிர் வாவும், வடக்கு திசைல் உள்ள கிணற்றில தண்ணீர் பங்கு வழிவாய்க்கால் உரித்துடன

பதிவு இல: H. 314/173

167/1, கோவில் வீதி, ப. நா தருமலிங்கம்
நல்லூர் வடககு. கொமிஷனரும், விலமதிப்பாளரும்,
யாழ்ப்பாணம். 4-10-70 எம 29 9-19-70

## 3 ஆம உலகத் தமிழ் மகாநாடு

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

இரண்டாம் கருத்தரங்கு மிகவும் பயன் மிதுநதது தமிழகத்திலும் மற்றும பிற நாடுகளிலும் கிடைத்த தமிழ் கல்வெட்டு தொல்பொருள் பற்றிய ஆராய்ச்சி தமிழினது வரலாற்றையும் கலாசாரத்தையும் அறிவதற்கு மிகவும் பயன்படுகிறது

சிந்து பள்ளத்தாக்கு நாகரீகத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது திரு. கமில் ஸ்வெலபில் குறிப்பிட்டதாவது. ரஷ்ய நாட்டு ஆராய்ச்சியாளர்கள் 1965ம ஆண்டில் இருந்தே சிந்து பள்ளத்தாக்கில் கிடைத்த கல்வெட்டுக்கள் திராவிட நாகரீகத்தைச் சார்ந்தவை என்று கூறி வருகின்றனர். எக்காரணத்தைமுன்னிட்டும் ஆரிய நாகரீகமாக இருப்பதற்கு சான்றுகள் இடையா. திராவிட மொழி ஒரு காலத்தில் சிந்து வெளியின் மொழியாக இருந்தது என்பதற்கு சிந்துவெளிப் புதைபொருள்கள் தக்க சான்றாகும். தொல்பொருள் ஆராயச்சி ஆணையாளரான திரு. நாகசாமி அவர்களின் ஆராய்ச்சித் தொகுப்பு பயன் மிகு படைப்பு. தமிழர்களின்எண்ணங்களைத் தூண்டிவிட்டது. அவரது ஆராய்ச்சிச் சுருக்கம் வருமாறு:-

அண்மையில் 1962-69 டாக்டர் பானர்ஜி அவர்களின் தலைமையின கீழ் நடைபெற்ற ஆராய்ச்சியின பயனாக பலருசிகரமான தகவல்கள் கிடைத்துள்ளன. நெல்லூர்ப் பகுதியில் இருந்து கிடைத்த ஆராய்ச்சித் தகவல்கள் தமிழகததில் கற்கால நாகரீகம் பரவியிருந்ததை உறுதிப்படுததுகின்றது. காவிரிப்பூம் பட்டினம், உறையூர், கொற்கை ஆகிய ஊர்கள சரித்திர முக்கியததுவம் பெற்றவை. அந்த ஊர்களில் புதைபொருள் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. காவிரிப்பூம் பட்டின ஆராய்ச்சிகளின் பயனாக பல புதியதகவல்கள் கிடைத்துள்ளன. ஆனால் பல பகுதிகள் தற்போதைய குடியிருப்புப் பகுதிகளாக இருப்பதில் ஆராய்ச்சியைத்தொடர்வதில் தடையுள்ளது. உறையூர் ஆராய்ச்சி தமிழ் நாகரீகத்தையும் காவிரி நாகரீகத்தையும் வெளிப்படுத்துகிறது. அக்காலத்தில் தமிழகத்தில் பருத்தித் தொழில் இருந்ததையும், கி. பி. 6-7ம் நூற்றுண்டு காலத்தில் காவிரி தன் போக்கை மாற்றிக் கொண்டதையும் அறிய முடிகிறது. கொற்கை பாண்டியர்களின் பழம் துறைமுகம் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு டாக்டர் கால்டுவெல கொற்கையை அகழ்ந்து அறிவதில் முனைந்தார். கிரேக்கர்களின் ஆதாரங்களை கொறகையில் காண முயற்சியைத் தொடர்ந்த இவர், தமிழகத்தின் பழம் சிறப்புக்கான பல நுண்ணிய தகவல்களைத் தந்துள்ளார் பளபளப்பான கறுப்புப் பாண்டங்கள் புழகத்தில் இருந்தன. இந்த ஊரின் நாகரீகச் சிறப்பை வெளிக்கொணர்கிறது என்கிறார். கொற்கையின் சிறப்பைப் பார்க்கும்போது இது சங்க காலத் துறைமுகமாக இருந்தது என்பதை நன்குவெளிப்படுத்துகின்றது. காஞ்சிநகர ஆராய்ச்சிகள் அந்த நகரம் வேத காலததில் இருந்து முன்னணியில் இருந்ததை நிரூபிக்கின்றன. காஞ்சி முற்காலத்தில் ஒரு துறைமுகமாக வர்ணிக்கப்படுகிறது ஆகவே பாலாறு முற்காலததில் ஒரு சிறந்த ஆற்றுப் போக்குவரத்துக்காக பயன்பட்டுவந்தது என்பதை உணரலாம், கடபல்போக்குவரத்துக்கள் கடலில் இருந்து உள்ளே காஞ்சிவரையிருந்து வந்திருக்க வேண்டும். பல்லவர்கள் ஆட்சிக் காலத்தில் அவர்களது ஆட்சியின் கீழ் லங்கா தீவுகள் இருந்து வந்ததையும உணர்கிறோம்.

—'லண்டன் முரசு' (1970)

[வளரும்]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M B 8980

1 இளையதம்பி கதிரிப்பிள்ளை கைம்பெண் பொன்னம்மாவும்
2 கதிரிப்பிள்ளை சின்னத்தம்பியும், நீர்வேலி வழக்காளி

எதிராக

1. சிதம்பரப்பிள்ளை பொன்னையா, நீர்வேலி வடக்கு —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் M B.8980-ஆம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இருதுண்டுகாணிகளை 1970-ம் ஆண்டு ஐப்பசி மீ 19-ந உ (19-10-70 திங்கட்கிழமை முற்பகல 10-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 39 6/-ம், 31-3-67 தொடக்கம் 2-5-68 வரைக்கும் ரூபாய் 2500/-க்கு 10 வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 347-75 இதில் ரூபா 250 நீக்கி

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று நீர்வேலி இறை 'பன்னாலை' நி. பர. 25ம், 10½ குளியும் பனைகளும், எல்லை கிழக்கு சந்திரசேகரக் குருக்கள் சுப்பிரமணியக் குருக்களுக்கும் மறுபேர்களுக்குமுரிய ஆதனங்கள், வடக்கு: சின்னையா பெண் லெட்சுமிப்பிள்ளையின் உரிமையாளருக்கும் மறுபேர்களுக்குமுரிய ஆதனங்கள், மேற்கு கணபதி மார்க்கண்டனுக்கும் பங்காளிகளுக்கும் மறுபேர்களுக்குமுரிய ஆதனங்கள், தெற்கு கதிர்காமர் சுப்பையாவுக்கும் மறுபேர்களுக்குமுரிய ஆதனங்கள் இவைபடங்கலுள் சொரியலாய் இரண்டில் ஒரு பங்கும், அவைக்குச் சொந்தமானவைகளும்.

2. டி இறை 'மைலன் புலம்' நி பர. 40ம், ¾ குளியும் பனைகளும், எல்லை கிழக்கு நாசிததம்பி வேலுப்பிள்ளைக்கும் பங்காளிகளுக்கும் மறுபேர்களுக்குமுரிய ஆதனங்கள், வடக்கு இதன் மிகுதிக்காணியும் மறுபேர்களுக்குமுரிய ஆதனம், மேற்கு அரசகேசரிப் பிள்ளையார் கோவிலுக்குரிய ஆதனம், தெற்கு ஒழுங்கை, இவையடங்கலுள் சொரியலாய் இரண்டில் ஒரு பங்கும் அவைக்குச் சொந்தமானவைகளும்.

**J. A. எட்வேட்**

கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை,
M 304 9-10-70

---

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவிதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 9—10—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்